சிவாயநம

திருச்சிற்றம்பலம்

**திருத்தொண்டர் வரலாறு**

# 01. தில்லைவாழ் அந்தணர் புராணம்

**கற்பனைக் கடந்த சோதி, கருணையே உருவமாகி**
**அற்புத கோலநீடி , அருமறை சிரத்தின் மேலாம்**
**சிற்பரவி யோமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று**
**பொற்புடம் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி**

என்று நிதம் கூத்தனின் கழலை வணங்கி, அதன் அருள்வழியாய் நீடு வாழ்ந்து வரும் அடியார் பெருமக்களே தில்லைவாழ் அந்தனர்கள். இவர்கள் முற்கரும நல்வினைப் பயன் காரணமாக பெருமானுக்குரிய திருத்தொண்டராகும் பேற்றினைப் பெற்றவர்களாவர். ஒழுக்கத்தில் தலைநின்றவர்கள். பெருகும் அன்பினால் அடித்தவம் புரிந்து வாழ்வார்கள்.




இவர்கள் செல்வம் மலிந்த சீர்பெற்ற அணிகலன்களை அழகுற ஆண்டவன் திருமேனியில் சார்த்தி, அலங்காரங்கள் செய்து, வேத மந்திரங்களால் பூதநாதனைத் துதித்து அரும்பணிகள் பலவும் இறைவனுக்குச் செய்து, இதனையே வாழ்நாள் தொண்டாக வாழ்ந்து வந்தனர். இவர்கள் அரிய நான்கு வேந்தங்களையும் ஆறு அங்கங்களையும் நன்கு கற்று முத்தீ என்று சிறப்பிக்கப்படும் ஆகவணீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் ஆகிய அக்னிகளை வளர்த்து வேள்விகள் முறைப்படி செய்து வாழ்ந்தனர். இவ்வந்தணர்கள் தமது நல்லொழுக்கத்தாலும், தவமேன்மையாலும், திருத்தொண்டினாலும் உலகிற்கு ஏதும் தீங்கு வராது காத்தனர்.

தானம், தவத்தில் சிறந்து, ஞானம் யோகம் கிரியை, சரியை ஆகிய நெறிகளை குற்றமில்லாமல் அறிந்திருந்தனர். அறுபத்திமூவரில் முதலாவது இடமாக "தில்லைவாழ் அந்தணர்" என்று சுந்தரமூர்த்தியாருக்கு தில்லைக் கூத்தனே அடியெடுத்துக் கொடுத்தான் என்றால் இவ்வடியார் பெருமக்களின் பெருமை சொல்லும் தகைத்ததோ.

திருச்சிற்றம்பலம்

(எழுத்து ஆக்கம் :- ஆன்மிகச் செம்மல், சிவ சு. நாகராஜன் தலைவர், சேக்கிழார் அறநெறி இயக்கம், கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா)